# NEWS CLIPPING 2019 – 2020

**One Day National Workshop** on
**CLOUD COMPUTING**
Dept. of Computer Science and Application
Date: 19.07.2019




மயிலம்

## தமிழ் கலைக்கல்லூரியில் கருத்தரங்கு

மயிலம், ஜூலை.23-
மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணினி அறிவியல் மற்றும் கணினி பயன்பாட்டியல் துறை சார்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதற்கு மயிலம் பொம்மபுரம் ஆதினம் 20-ம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் ராஜீவ் குமார் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு வரவேற்றார். கணினி அறிவியல் துறை தலைவி அனுராதா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக சென்னை சான்ஸ்போன்டு சொல்யூசன்ஸ் நிறுவன முதன்மை பயிற்சியாளர் ஹியூசிபா கலந்து கொண்டு கணினி அறிவியல், கணினி பயன்பாட்டியல் துறைகளில் வேலைவாய்ப்புகள் குறித்து மாணவர்களிடையே கருத்துரைகளை வழங்கி பேசினார். அதனை தொடர்ந்து பல்வேறு கல்லூரிகளில் இருந்து வந்திருந்த மாணவ-மாணவிகள் தங்களது ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தனர். சிறந்த கட்டுரைகளை சமர்ப்பித்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதில் துணை பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர். முடிவில் கணினி துறை தலைவி முத்துலட்சுமி நன்றி கூறினார்.

# National Level One Day Workshop
# "ENTREPRENEURSHIP AND SOFT SKILLS"
## Organised by
## Dept. of Commerce - 17.09.2019




■ மயிலம் கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் தேசிய கருத்தரங்கில் மாணவ, மாணவியருக்கு சான்றிதழ்களை கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு வழங்கினார்.

# மயிலம் கல்லூரியில் தேசிய கருத்தரங்கம்

**மயிலம், செப். 19–**

மயிலம் ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ், கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் வணிகவியல் துறை சார்பில் தேசிய கருத்தரங்கம் நடந்தது.

கருத்தரங்கத்திற்கு, மயிலம் பொம்மபுர ஆதினம் 20ம் பட்டம் சிவஞானபாலய சுவாமிகள் தலைமை தாங்கினார். ராஜிவ்குமார் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். வணிகவியல் துறை தலைவர் ஆனந்தராஜன் வரவேற்றார். மயிலம் கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு அறிமுகவுரையாற்றினார்.

புதுச்சேரி சாரதா கங்காதரன் கல்லூரி வணிகவியல் துறை தலைவர் மதனி, தஞ்சாவூர் ராஜா சரபோஜி அரசு கலைக் கல்லூரி உதவி பேராசிரியர் சுவாமிநாதன் ஆகியோர் தொழில் முனைவோர்கள் மேற்கொள்ள வேண்டிய வழி முறைகள் குறித்து சிறப்புரையாற்றினர்.

கருத்தரங்கில் வணிகவியல் துறை உதவி பேராசிரியர்கள் வீரமுத்து, சபரிராஜ், சுதா, அமுதவள்ளி, அமுத மங்கையர்க்கரசி, இளவரசன், பாபு, பாலாஜி மற்றும் பொம்மையார்பாளையம் சித்தர் சிவஞானி கல்லூரி, பவ்டா, சூரியா உட்பட பல கல்லூரிகளிலிருந்து மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர்.



மயிலம் தமிழ் கலைக்கல்லூரியில்

# குடியரசு தினவிழா

மயிலம், ஜன.28-
மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரியில் குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. விழாவுக்கு மயிலம் பொம்மபுர ஆதீனம் 20-ம் பட்டம் சுவாமிகள் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு முன்னிலை வகித்து தேசிய கொடி ஏற்றி வைத்து சிறப்புரையாற்றி பேச்சு போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் சிறப்பு பரிசு வழங்கினார். இதில் உதவி பேராசிரியர்கள் முத்துலட்சுமி, அனுராதா, வேதாச்சலம், ஆனந்தராஜ் மற்றும் மாணவ-மாணவிகள் கலந்துகொண்டனர்.

# International Seminar on

## "Samayam Katdum Samuka Mempadu"

**Date: 08.02.2020 to 09.02.2020**



# பன்னாட்டு கருத்தரங்கம்

மயிலம், பிப்.10-

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரி மற்றும் தமிழாய்வுத்துறை, அனைத்திந்திய எழுத்தாளர்கள் சங்கம் ஆகியன சார்பில் பன்னாட்டு கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதற்கு மயிலம் பொம்மபுர ஆதினம் 20-ம் பட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் ராஜீவ் குமார் ராஜேந்திரன், சென்னை அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்க தேசிய தலைவர் பெரியண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு வரவேற்றார்.

இதில் வேலூர் மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் எழிலன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார். இதில், 170 தமிழறிஞர்கள் ஆய்வு செய்த 170 கட்டுரைகள் அடங்கிய சமயம் காக்கும் சமூக மேம்பாட்டு ஆய்வு கேவை என்ற புத்தகத்தை இரண்டு தொகுப்புகளாக ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் வெளியிட்டு, தமிழ் எழுத்தாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்க பொது செயலாளர் இதய கீதம், ஆஸ்திரேலியா தமிழ் ஆர்வலர் பேராசிரியர் மயிலி அனந்த கிருஷ்ணன், மலேசிய தமிழ் மகளிர் இயக்க தலைவர் ராமநாயகம், இலங்கை யாழ்பான பல்கலைக்கழக சமஸ்கிருத துறை தலைவர் பத்ம நாபன், ஆஸ்திரேலிய மென்பொறியாளர் நாகராஜன், மலேசிய தமிழ்ச் சங்க கூட்டமைப்பு துணை தலைவர் கிருஷ்ணன் உள்பட பல்வேறு நாடுகளில் வசித்து வரும் தமிழ் ஆர்வலர்கள், மயிலம் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் என்று பலர் கலந்து கொண்டனர். முடிவில் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்க இணை செயலளார் பழநி நன்றி கூறினார்.

**One Day International Conference in**

**"Smart Technologies in Computer Science"**

**Dept. of Computer Science and Dept. of Applications**

**Date: 22.02.2020**



மயிலம்

# தமிழ் கலைக்கல்லூரியில் பன்னாட்டு கருத்தரங்கம்

மயிலம், பிப்.23-

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அறிவுசார் தொழில்நுட்ப பன்னாட்டு கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நடந்தது. இதற்கு மயிலம் பொம்மபுர ஆதினம் 20-ம் பட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் ராஜீவ்குமார் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். முதல்வர் திருநாவுக்கரசு வரவேற்றார்.

இதில் மலேசியா பல்கலைக்கழக பேராசிரியர் இளந்தமிழ், கேரளா பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் முகமது நூருல்முபாரக், சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் வேல்முருகன் ஆகியோர் ஆய்வுரை வழங்கினர். சிறப்பு அழைப்பாளராக சென்னை வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவன தமிழ்த்துறை இணை பேராசிரியர் பன்னிருகை வடிவேலன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

கருத்தரங்கில் மயிலம் பொம்மபுர ஆதினம் 20-ம் பட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள், கணினித்துறை சார்பில் ஆய்வு செய்த 37 ஆராய்ச்சி கட்டுரை தொகுப்பை நூலாக வெளியிட்டு ஆசியுரை வழங்கினார். கணினி அறிவியல் துறைத்தலைவர் முத்துலட்சுமி அறிமுக உரையாற்றினார். நிகழ்ச்சியில் கல்லூரி உதவி பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள் கலந்துகொண்டனர். முடிவில் கணினி பயன்பாட்டியல் துறைத்தலைவர் அனுராதா நன்றி கூறினார்.

# CYBER CRIME AWARENESS PROGRAM

## FOR STUDENTS DEPARTMENT OF COMPUTER SCIENCE AND DEPARTMENT OF COMPUTER APPLICATION – 05.02.2020



### மயிலம் தமிழ் கல்லூரியில்

# கணினி குற்றத்தடுப்பு விழிப்புணர்வு

மயிலம், மார்ச்.8-

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை, அறிவியல் கல்லூரியில் மயிலம் போலீஸ் நிலைய சைபர் கிரைம் பிரிவு சார்பில் கணினி குற்றத்தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. இதற்கு மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் 20-ம் பட்ட சிவஞான பாலய சுவாமிகள் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு முன்னிலை வகித்தார். மயிலம் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் நடராஜ், செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டு செல்போன் பயன்படுத்துபவர்கள் அனைவரின் பதிவுகளும் கணினியில் பதிவாகிவிடும், அதனால் செல்போனில் பேசும்போது குற்றத்திற்கு ஆளாகாமல் பேச வேண்டும். ஹெல்மெட் அணிந்து மோட்டார் சைக்கிள்களை ஓட்ட வேண்டும். சாலை விதிகளை கடைபிடிக்க வேண்டும் என்றும், கணினி குற்றத்தடுப்பு குறித்தும் பேசினர். இதில் கல்லூரி துணை பேராசிரியர்கள் அனுராதா, சிவப்பிரகாசம், முத்துலட்சுமி, மணிகண்டன், பிரசாத் மற்றும் மாணவ-மாணவிகள் கலந்துகொண்டனர்.

International Conference on

**“DIGITAL ECONOMY : CHALLENGES AND OPPORTUNITES”**

Organized by PG and Research Department of Commerce

Date: 06th March 2020

### மயிலம் தனியார் கல்லூரியில்

# வணிகவியல் துறை சார்ந்த கருத்தரங்கு!

மயிலம், மார்ச்.08–

மயிலத்தில் இயங்கி வரும் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் ஒரு நாள் பன்னாட்டு கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சியை இருபதாம் பட்டம் திருஞான பாலய சுவாமி தலைமையில் இந்நிகழ்ச்சியை கல்லூரியின் முதல்வர் திருநாவுக்கரசு குத்துவிளக்குஏற்றி துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பெரம்பலூர் அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் கணேசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக இணை பேராசிரியர் ராஜராஜன், வணிக ஆராய்ச்சித் துறை உதவி பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி, எதியோப்பியாநாட்டின் செனட் உறுப்பினரும் கணக்கியல் துறை ஆய்வு ஆலோசகருமான அன்பழகன் செகந்திராபாத் உதவி பேராசிரியர் உமா மகேஸ்வரி ,புதுச்சேரி பல்கலைக்கழக வணிகவியல் துறை கவுரவ விரிவுரையாளர் சம்பத் உள்ளிட்ட துறைசார்ந்த ஆலோசகர்கள் கலந்துக் கொண்டு மாணவர்களிடையே உரையாற்றினார்கள்.



மயிலத்தில் இயங்கி வரும் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் ஒரு நாள் பன்னாட்டு கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சியை இருபதாம் பட்டம் திருஞான பாலய சுவாமி தலைமையில் கல்லூரியின் முதல்வர் திருநாவுக்கரசு குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

# ONE DAY NATIONAL CONFERENCE ON

## "ENGLISH STUDIES: DISCOURSE IN THE MODERN PRECEDENTIAL"

**Date: 07.03.2020**



மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ் மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆங்கில துறையின் சார்பாக தேசிய அளவிலான ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது

## மயிலம் தனியார் கல்லூரியில்

# ஒரு நாள் கருத்தரங்கம்!

மயிலம்,மார்ச்.11

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ் மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆங்கில துறையின் சார்பாக தேசிய அளவிலான ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது .இதில் கல்லூரியின் முதல்வர் திருநாவுக்கரசு கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார் .மேலும் இந்நிகழ்ச்சியில்திருவள்ளுவர்பல்கலைக்கழக பேராசிரியர்டாக்டர் கதிரேசன்,அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தின்பேராசிரியர்ஞானப்பிரகாசம் ,ஆந்திரமாநிலம்சித்தார்த்அறிவியல்தொழில்நுட்பநிறுவனத்தின்பேராசிரியர் டாக்டர் இந்துமதி உள்ளிட்ட துறை சார்ந்த பேராசிரியர்கள் கலந்துகொண்டு மாணவர்களிடையே உரையாற்றினார்கள். பின்பு துறை சம்மந்தப்பட்ட நூல கல்லூரியின்முதல்வர்திருநாவுக்கரசுவெளியிட்டார். முடிவுல் ஆங்கிலத்துறை பேராசிரியர் கனிமொழி நன்றி கூறினார்.

இதில்கல்லூரியின்பேராசிரியர்கள், உதவிப்பேராசிரியர்கள்,மாணவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மயிலம் கல்லூரியில் தேசிய கருத்தரங்கம்




■ மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரியில் ஆங்கில துறை சார்பில் நடந்த தேசிய கருத்தரங்கில் ஆய்வு நூலை திருநாவுக்கரசு வெளியிட்டார்.

**மயிலம், மார்ச் 12–**

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரியில் ஆங்கில துறை சார்பில் தேசிய கருத்தரங்கம் நடந்தது.

மயிலம் கல்லூரி சிவப்பிரகாசர் அரங்கில் நடந்த தேசிய கருத்தரங்கிற்கு, மயிலம் பொம்மபுர ஆதினம் 20ம் பட்ட சுவாமிகள் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். கல்லூரி செயலர் ராஜ்குமார் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு வரவேற்றார். ஆங்கிலத்துறை தலைவர் வேதாச்சலம் அறிமுக உரையாற்றினார்.

திருவள்ளுவர் பல்கலைக்கழக பேராசிரியர் கதிரேசன், அண்ணாமலை பல்க்லைக்கழக பேராசிரியர் ஞானப்பிரகாசம், ஆந்திர மாநில கல்லூரி பேராசிரியை இந்துமதி உட்பட மாணவர்கள் பலர் ஆய்வறிக்கைகளை சமர்பித்தனர்.

கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆங்கில துறை உதவி பேராசிரியர் கனிமொழி நன்றி கூறினார்.